# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (27.04.2024 முதல் 01.05.2024)

**அறிக்கை எண் 034/2024** **தேதி.26.04.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

கோயமுத்தூர் மாவட்டத்தின் 23.04.24 முதல் 25.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 39°C முதல் 40°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 25°C முதல் 27°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்த வார வானிலை (23.04.2024 முதல் 25.04.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 01.05.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **23/04** | **24/04** | **25/04** | **தேதி** | **நாள்-1 27/04** | **நாள்-2 28/04** | **நாள்-3 29/04** | **நாள்-4 30/04** | **நாள்-5 01/05** |
| 1.1 | 0.0 | 0.8 | **மழை (மி.மீ)** | 0 | 0 | 0 | 1 | 1 |
| 40 | 39 | 39 | **அதிக பட்ச வெப்பநிலை (°செ)** | 40 | 40 | 41 | 41 | 40 |
| 27 | 25 | 26 | **குறைந்த பட்ச வெப்பநிலை (°செ)** | 27 | 27 | 27 | 26 | 27 |
| 6 | 6 | 3 | **மேக மூட்டம் (ஆக்டா)** | 3 | 3 | 6 | 6 | 7 |
| 69 | 62 | 75 | **அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%)** | 70 | 70 | 70 | 80 | 80 |
| 22 | 21 | 20 | **குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%)** | 20 | 20 | 20 | 20 | 30 |
| 11 | 8 | 9 | **காற்றின் வேகம் (கி.மீ/மணி)** | 10 | 8 | 10 | 10 | 12 |
| 90 | 90 | 90 | **காற்று வீசும் திசை** | 250 | 250 | 250 | 250 | 250 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (27.04.2024 முதல் 01.05.2024)**

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 30.04.2024 மற்றும் 01.05.2024 அன்று இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 40°செ முதல் 41°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 26°செ முதல் 27°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **27-04-2024** | 0.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 | 0.0 | 0.0 |
| **28-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **29-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **30-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **01-05-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 12 கி.மீ வேகமான காற்றுடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது.<br>மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் வேலைபார்பதோ அல்லது வெளியில் செல்வதையோ விவசாயிகள் தவிர்க்கவேண்டும்.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். |
| கம்பு (அ) சோளம் | **விதைப்பு** | இறவையில் கம்பு (அ) சோளம் விதைக்க மிகச்சரியான தருணம். எனவே, மக்காசோளம் விதைக்க தீர்மானித்திருந்தால் தவிர்த்து கம்பு(அ) சோளம் விதைக்கலாம். |
| கரும்பு | வளர்பருவம் | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பின் நுனிக்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. ஏனவே விவசாயிகள் அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்துக்கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம். |
| வாழை | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் சுழற்காற்று மற்றும் இடியுடன் கூடிய கோடை மழை பொழிய வாய்ப்புள்ள து, எனவே 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை |

| | | |
|---|---|---|
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும்.<br>தொடர்ந்து வறண்ட வானிலையுடன் அதிக வெப்பமும் காணப்படுவதால் கோழி மற்றும் மாடு கொட்டகைகளின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம் அல்லது நனைந்த கோணிப்பையை கூடாரத்தின் ஓரங்களில் தொங்கவிடுவதும் ஓரளவிற்கு நன்மை பயக்கும்.<br>மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தினைத் தவிர்த்து கால்நடைகளை 4.00 மணிக்கு மேல் மேய்ச்சலுக்கு விடவும். |

**குறுஞ்செய்தி**

- தொடர்ந்து வறண்ட வானிலையுடன் அதிக வெப்பமும் காணப்படுவதால் கோழி மற்றும் மாடு கொட்டகைகளின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம்

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**